சென்னை பூங்கா நகர் தொகுதி புளியந்தோப்புப் பதியிலுள்ள மாநகராட்சிக்குச் சொந்தமான காச நோய் மருத்துவமனையில் இயங்கி வந்த எக்ஸ்ரே படக் கருவி வேறு இடத்திற்கு மாற்றப்பட்டு விட்டதால், அந்தப் பகுதியிலுள்ள மக்கள் சரியான மருத்துவ சிகிச்சை பெறமுடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளதை அரசு அறியுமா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவரவர்களே,

ஆம். இது சம்பந்தமாக, புளியந்தோப்பு பகுதி மருத்துவமனையிலிருந்து எடுக்கப்பட்ட எக்ஸ்ரே படக்கருவிக்குப் பதிலாக, சென்னை நகர காச நோய் சங்கம் புதிய எக்ஸ்ரே படக்கருவியை வாங்க ரூ. 2,75,000 ஒதுக்கியுள்ளதையடுத்து புதிய படக்கருவி ஒன்று வாங்கப்பட்டு புளியந்தோப்பு மருத்துவமனையில் பொருத்தப்படும் நிலையில் உள்ளது. வெகு விரைவில் செயல்படத் துவங்கும்.

திருவண்ணாமலை அரசு மருத்துவமனையில் கூடுதல் படுக்கை வசதி.

*5125—திரு. கே. பிச்சாண்டி :

மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருவண்ணாமலை அரசு மருத்துவமனையில் கூடுதலாக படுக்கை வசதி செய்து தர அரசிடம் திட்டம் ஏதும் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவரவர்களே,

இல்லை.

9-45 மணி

திரு. கே. பிச்சாண்டி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தற்போது திருவண்ணாமலை, மாவட்டத்தின் புதிய தலைநகராக மாறியிருக்கிறது. அங்கேயுள்ள மருத்துவமனைக்கு மாவட்டத்திலிருந்து வரும் நோயாளிகளுக்கு இடம் இல்லாத நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. தாலுக்கா மருத்துவமனை போலவே இன்றையதினமும் அந்த மருத்துவமனை இருப்பதால், பொது மக்களுக்கு ஏற்படும் பிரச்சினையை மனதிலே கொண்டு, மாவட்ட மருத்துவமனை அளவுக்குப் படுக்கை வசதிகளை அதிகரிக்க அரசு முன்வருமா ?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1990 ஆகஸ்ட் 23]

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: பேரவைத் தலைவரவர்களே, அங்கே தற்போது இருக்கிற மருத்துவ மனையில் 182 படுக்கைகள் இருக்கின்றன. அதை மாவட்ட மருத்துவ மனையாக முழுமையாக உயர்த்த வேண்டுமென்றால் 400 படுக்கைகளைக் கொண்டதாக உயர்த்த வேண்டும். அங்கே படுக்கை வசதியை உயர்த்துவதற்கு இட வசதி இல்லாமல் இருக்கிறது. எனவே சுமார் 35 ஏக்கர் நிலத்தை வாங்குவதற்கு வருவாய்த் துறை அதிகாரிகளிடம் கலந்து, மாவட்ட மருத்துவ அலுவலரால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அதெல்லாம் முடிந்த பிறகு அதை மாவட்ட மருத்துவ மனையாக உயர்த்த அரசு பரிசீலனை செய்யும்.

திரு. கே. பிச்சாண்டி: பேரவைத் தலைவரவர்களே, இன்றைக்கு திருவண்ணாமலை அரசு மருத்துவ மனைக்கு அருகிலே கால்நடை மருத்துவமனை 3 ஏக்கரில் உள்ளது. அந்தக் கால்நடை மருத்துவ மனையை வேறு இடத்திற்கு மாற்றிவிட்டு அந்த இடத்தை மருத்துவ மனையோடு சேர்த்து புதிதாகக் கட்டிட வசதிகளைச் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: பேரவைத் தலைவரவர்களே, நான் 35 ஏக்கர் நிலத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்று குறிப்பிட்டேன். ஆனால் 3 ஏக்கர் நிலம் அருகிலே இருப்பதாக உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். உறுப்பினர் அவர்களுடைய கருத்தை அரசு பரிசீலிக்கும்.

தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவு நீர்.

*9523—திரு. இரா. மதிவாணன்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சென்னை செங்கை - அண்ணா மாவட்ட கடற்கரை அருகில் அமைந்துள்ள பெரிய தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் விஷத்தன்மை வாய்ந்த கழிவு நீர் கடலில் கலப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: பேரவைத் தலைவரவர்களே,